**<u>ஈரோடு மாவட்டம்.</u>**

**<u>புன்செய் புளியம்பட்டி நகராட்சி குடிநீர் விநியோகம் குறித்த அறிக்கை</u>**

- புன்செய் புளியம்பட்டி நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாகும். இந்நகராட்சி ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ளது. மொத்தமுள்ள வார்டுகள் 18. இதன் பரப்பளவு 4.54 சதுர கி.மீ. 2011–ன்படி மக்கள் தொகை 18967 ஆகும். தற்போதைய மக்கள் தொகை தோரயமாக 27500 ஆகும். இந்நகராட்சியின் பராமரிப்பில் குடிநீர் விநியோக திட்டம் இயங்கி வருகிறது.
- தற்போது குடிநீர் விநியோகமானது 109 LPCD வீதம் 13 வார்டுகளுக்கு தினசரியும், 5 வார்டுகளுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் என்ற முறையில் சீராக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் மழையின் அளவு இவ்வாண்டில் போதுமான அளவு பெய்துள்ளது.
- நீர் ஆதாரமாக பவானிசாகர் அணை LBP வாய்க்காலிருந்து தண்ணீர் பெறப்படுகிறது. அணையில் தற்போது 54.80அடி அளவு நீர் உள்ளது. இதனால் இந்நகராட்சியில் ஜூன் 2026 முதல் ஆகஸ்ட் 2026 வரை குடிநீர் பிரச்சனை ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை.
- இந்நகராட்சிப்பகுதியில் 32 ஆழ்குழாய் கிணறுகள் உள்ளது. இதில் மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டு நகரில் உள்ள 7 மேல் மட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளின் மூலமாகவும், 23 சின்டெக்ஸ் தொட்டிகளின் மூலமாகவும், குடிநீர் உபயோகமற்ற நீர் ஏற்றப்பட்டு நாள்தோறும் சுமார் 0.60 MLD தண்ணீர் பொது மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வரப்படுகிறது.
- பவானிசாகர் அணையில் தண்ணீர் உள்ள வரையில் இந்நகரில் குடிநீர் விநியோகம் ஜூன் 2026 முதல் ஆகஸ்ட் 2026 வரை பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இல்லை என்ற விபரத்தினைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையாளர்**
**புன்செய்புளியம்பட்டி நகராட்சி**